<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | |
|---|---|---|
| Case No | : | STC.No.1203/2019 Date:22.12.2022 |
| Deposition of Witness for | : | எ.சா.1 |
| Name | : | கிருஷ்ணன் |
| Father/Husband Name | : | ராமசாமி |
| Village | : | சின்னாகவுண்டனூர் |
| Taluk | : | சங்ககிரி |
| Calling | : | சிலிண்டர் டெலிவரி மேன் |
| Religion | : | இந்து |
| Age | : | 43 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 22.12.2022.

**<u>முதல் விசாரணை</u>** :

1) நான் மொத்தையனூரில் குடியிருந்து சிலிண்டர் டெலிவரி செய்யும் வேலை செய்துவருகிறேன். இவ்வழக்கின் புகார்தாரர் அனந்தகுமார் என்பவரை தெரியும். எதிரி நவீன்குமாரின் கேஸ் கம்பெனியில் வேலைசெய்து வருகிறேன். என்னுடன் புஷ்பாவின் தம்பி சுரேஷ் என்பவரும் வேலைசெய்துவந்தார். 2005 முதல் சுமார் 14 வருடம் சுரேஷ் வேலைசெய்தார். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் காசோலை காணவில்லை என எனது முதலாளி நவீன் கூறினார்.

2) மேலும் கம்பெனியில் வேலைசெய்யும் அனைவரையும் அழைத்து காசோலை காணவில்லை என கூறி அதுகுறித்து விசாரித்தார். அதனால் சுரேஷ்சை வேலையிலிருந்து நவீன் நீக்கிவிட்டார். சுரேஷ்தான் காசோலைகளை பராமரித்துவந்தார். சுரேஷ்சை வேலையைவிட்டு நீக்கியபின்னர் சுரேஷ், புஷ்பா மற்றும் அனந்தகுமார் ஆகியோர்கள் நவீன் அலுவலகத்திற்குவந்து சண்டைபோட்டார்கள். அப்போது கம்பெனியில் வேலைசெய்யும் அனைவரும் இருந்தோம். அதன்பிறகு அவர்கள் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தார்கள். சுரேஷ்ம், புஷ்பாவும் நவீனை பார்த்து உன்னை பழிவாங்காமல் விடமோட்டோம் என்று கூறிசென்றார்கள். கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு எனது முதலாளி நவீன்

என்னிடம் ஆனந்தகுமார் என்பவர் தன் மீது காசோலை வழக்கு தாக்கல்செய்துள்ளதாகவும், அது சம்மந்தமாக நீதிமன்றத்திற்கு வந்து சாட்சி சொல்லுமாறு கூறினார்.

<u>**குறுக்கு விசாரணை**</u> :

1. எந்த தேதி, மாதம் வருடத்தில் காசோலை காணாமல்போனதாக நவீன் தெரிவித்தார் என்றால் 2018 ம் வருடம், தேதி, மாதம் ஞாபகம் இல்லை. எங்களிடம் காசோலை காணாமல்போனது குறித்து நவீன் எப்போது கேட்டார் என்றால் 2018 ம் வருடம், 8 அல்லது 9 வது மாதம் , தேதி ஞாபகம் இல்லை. எங்களிடம் கேட்டதற்கு எவ்வளவு நாட்களுக்குமுன்னர் காசோலை காணாமல்போனதாக நவீன் சொன்னார் என்றால் சுமார் 15 நாட்களுக்கு முன்னர்.

2. மேற்படி காசோலை காணாமல்போன விஷயமாக நவீன் புகார்கொடுத்ததாக தெரிவித்தாரா என்றால் இல்லை. எத்தனை காசோலைகள் காணாமல்போனதாக தெரிவித்தார் என்றால் 3 அல்லது 4 காசோலைகள், சரியாக ஞாபகம் இல்லை. எந்த வங்கி காசோலை என்றால் ஞாபகம் இல்லை. நிரப்பிய காசோலைகளா என்றால் கையொப்பம்செய்து ஆனால் மற்ற விவரங்கள் பூர்த்திசெய்யப்படாத காசோலைகள். அதன்பிறகு காசோலைகள் காணாமல்போனது சம்மந்தமாக காவல்நிலையத்திலோ அல்லது வங்கியிலோ புகார் கொடுத்தாரா என்றால் அது எனக்கு தெரியவில்லை.

3. சுரேஷ், புஷ்பா , அனந்தகுமார் ஆகியோர்கள் மிரட்டியதாக நவீன் புகார் கொடுத்தாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. மேற்படி கேஸ் கம்பெனிக்கும் , சங்ககிரி, காவல்நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 500 அடி இருக்கும். இதுசம்மந்தமாக நான் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை.

4. நான் கூறுவதுபோல் காசோலைகள் காணவில்லைஎன நவீன் என்னிடம் கூறவில்லை என்றால் சரியல்ல. நவீன் எனது முதலாளி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காசோலை காணாமல்போனதற்காக சுரேஷ்யை வேலையை விட்டு நீக்கியதாக கூறுவது பொய்

என்றால் சரியல்ல. இவ்வழக்கு சம்மந்தமாக கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு நவீன் என்னிடம் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

S R BABU Digitally signed by S R BABU
Date: 2022.12.22 17:13:55
+0530

**Sd /- Krishnan**

**Judicial Magistrate No.1,**
**Sankari.**